அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 07/2017(I)

எனது இலக்கம் : EST-6/03/LEA/3221-1
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.02.05

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## மகப்பேறின்மைக்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள அவசியப்படும் அரச அலுவலர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்குதல்

2017.03.10 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 07/2017 இன் மூலம் திருத்தியமைக்கப்பட்ட தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயம் 22:9 உபபிரிவின் பால் உமது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. அவ்வுபபிரிவு பின்வருமாறு திருத்தியமைப்பதற்கு 2020.12.14 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

> "22:9 மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் வைத்திய நிபுணர் ஒருவரின் சிபார்சின் பேரில், அரசாங்க மகளிர் அலுவலர் ஒருவருக்கு மகப்பேறு தொடர்பாக உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கு அதிகூடியதாக ஓராண்டுகாலம் (01) வரை சம்பளமற்ற விடுமுறை வழங்க முடியும். கணவன் மனைவியாக இருவரும் மகப்பேற்றின்மைக்கான சிகிச்சை பெறுவதற்கு மகப்பேற்று மற்றும் பெண்நோயியல் வைத்திய நிபுணர் ஒருவர் சிபாரிசு வழங்கினால் ஆண் அலுவலர்களுக்காக இங்கு 22:1 ஆம் பிரிவின் கீழமைந்த அதிகபட்சம் 03 மாத காலத்துக்கு தொடர்ச்சியான கால அளவுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சம்பளமற்ற விடுமுறையும், மேலும் விடுமுறை தேவைப்படுமாயின் மேலதிகமாக அதிகபட்சம் 30 நாட்களும் இடைவெளியுடன் அல்லது தொடர்ச்சியான கால அளவுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சம்பளமற்ற விடுமுறை வழங்க முடியும்."

03. இவ்வேற்பாடுகள் 2020.12.14 ஆந் திகதி முதல் வலுவிலிருக்கும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு